IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.231/2026

Deposition of Witness PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : மாதேஸ்வரன் | Father Name : | |
| Village | : | Calling | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.06.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் ஈரோடு நகர காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2025 அன்று நிலைய உதவி ஆய்வாளர் சந்திரசேகரன், காவலர் வித்யாதரன் ஆகியோருடன் நானும் குற்றத் தடுப்பு நடவடிக்கையாக காலை 10 மணிக்கு ரோந்து அலுவலாக சென்றபோது ஈரோடு அகில்மேடு 6வது வீதி MM.மகேஸ்வரி பூக்கடை முன்பு கண்காணித்துக் கொண்டிருந்தபோது TN 39 CC 1307 என்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுனர் போலீஸ் பார்ட்டி ஆகிய எங்களை பார்த்தவுடன் ஓட முயற்சித்தவரை பிடித்து விசாரித்த போது அவரது பெயர் சென்னியப்பன் என்றும், அரசு மது கடை விடுமுறை என்றும், விடுமுறை நாளில் அரசு மதுபானத்தை அதிக விலைக்கு விற்றால் அதிக லாபம் கிடைக்கும் என்று விற்பனைக்கு வைத்திருப்பதாக தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட வரை

S RAJKUMAR Digitally signed by S RAJKUMAR Date: 2026.06.03 18:56:10 +0530

35(3) BNSS அழைப்பாணை சார்பு செய்த போது அதை அவர் வாங்க மறுத்து விட்டார்.

அவரிடம் உச்சநீதிமன்ற நெறிமுறைகளை மேற்கோள் காட்டி காலை 10:15 மணிக்கு அவரை கைது செய்து, மேலும் அவர் வாகனத்தில் வைத்திருந்த வெள்ளை பையில் 180 ml அளவுள்ள எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில்கள்–12, மற்றும் ரூபாய்.1000/– , இருசக்கர வாகனம் ஆகியவற்றை பொதுஜன சாட்சிகளான குமார் மற்றும் செல்வம் ஆகியோர் முன்னிலையில் 10.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகள் கையொப்பம் செய்தும், எதிரி மற்றும் உதவி ஆய்வாளர் கையொப்பம் செய்தார். அதில் இரண்டு பாட்டில்கள் திறந்த நிலையில் சீல் உடைக்கப்பட்டு இருந்தன.

அதை முகர்ந்து பார்த்தபோது விஷவாடை அடித்தது. பின்பு அந்த பாட்டில்களை ரசாயன பகுப்பாய்வுக்கு சம்பவ இடத்தில் வெள்ளைத் துணியால் நூல் கொண்டு அடைத்து எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காலை 11.30 மணிக்கு நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண்.267/25, சட்டப்பிரிவு 4(1)(C) r/w, 4(1)(A) TNP Act வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆஜர் எதிரியிடம் இருந்துதான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது. இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் எங்கள் இருவரையும் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்பவம் நடந்ததாக கூறப்படும் பகுதி பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தை சுற்றி நிறைய வீடு,

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.03 18:56:46 +0530

கடைகள் உள்ளது என்றால் கடை உள்ளது. காவல் நிலையத்திலிருந்து 9.30 மணிக்கு ரோந்து பணிக்கு கிளம்பி விட்டோம். வழக்கு சம்பவம் தொடர்பாக பொதுமக்களோ, தனிநபர் யாரும் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பொதுமக்கள் யாரையும் சம்பவ இடத்தில் உதவி ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளை விசாரித்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு ரோந்து சென்ற போது எதிரி அங்கு நின்று கொண்டிருந்தார். மற்ற இருவர் ஓடி விட்டனர். ஓடிய நபர்களை பிடித்து விசாரித்தோமா என்றால் இல்லை. இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட மொத்த மதுபானத்தின் அளவு 2.160 லிட்டர் என்றால் சரிதான்.

ஒரு தனி நபர் தனது சொந்த உபயோகத்திற்காக 4.5 லிட்டர் அளவு மதுபானம் வைத்துக்கொள்ள அனுமதி உள்ளது என்றால் சரிதான். ஆனால் எதிரி விற்பனைக்கு வைத்திருந்ததால் தான் அவரை பிடித்தோம். மகேஸ்வரி பூக்கடை உரிமையாளரையோ, அங்கு இருந்தவர்களையோ சம்பவம் குறித்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சியாக உள்ள குமார் டாஸ்மார்க்கில் பணிபுரியும் நபர் என்பதால் தான் அவரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

எனது உயர் அதிகாரி கேட்டுக் கொண்டதின் பேரில் புள்ளிவிவர கணக்கிற்காக எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எதுவும் எதிரியிடமிருந்து

S RAJKUMAR
Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.03 18:56:54 +0530

கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் உள்ள நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த மதுபான பாட்டில்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S RAJKUMAR

Digitally signed by S RAJKUMAR
Date: 2026.06.03 18:57:01 +0530

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ERODE

CC No.231/2026

Deposition of Witness PW2

Name : வித்யாதரன் Father Name :

Village : Calling :

Taluk : Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.06.2026

சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் ஈரோடு நகர காவல் நிலையத்தில் முதல் நிலை கவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.10.2025 அன்று நிலைய உதவி ஆய்வாளர் சந்திரசேகரன், தலைமை காவலர் மாதேஸ்வரன் ஆகியோருடன் நானும் குற்றத் தடுப்பு நடவடிக்கையாக காலை 10 மணிக்கு ரோந்து அலுவலாக சென்றபோது ஈரோடு, பஸ் ஸ்டாண்ட், அகில்மேடு 6வது வீதி MM.மகேஸ்வரி பூக்கடை முன்பு கண்காணித்துக் கொண்டிருந்தபோது சந்தேகத்திற்கு இடமாக ஒரு நபர் வண்டியுடன் வெள்ளை நிற பையை வைத்துக்கொண்டு நின்றிருந்தார். அவர் எங்களை பார்த்தவுடன் தப்பிச் செல்ல முயன்றார்.

அவரை பிடித்து விசாரித்த போது அவரது பெயர் சென்னியப்பன் என்றும், அரசு மது கடை விடுமுறை என்றும், விடுமுறை நாளில் அரசு மதுபானத்தை அதிக விலைக்கு விற்றால் அதிக லாபம் கிடைக்கும் என்று

விற்பனைக்கு வைத்திருப்பதாக தனது குற்றத்தை ஒப்புக்கொண்ட வரை உதவி ஆய்வாளர் 10.15 மணிக்கு கைது செய்தார்.

மேலும் அவர் வாகனத்தில் வைத்திருந்த வெள்ளை பையில் 180 ml அளவுள்ள எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில்கள்–12, மற்றும் ஸ்ப்ளெண்டர் இருசக்கர வாகனம் ஆகியவற்றை பொதுஜன சாட்சிகளான குமார் மற்றும் செல்வம் ஆகியோர் முன்னிலையில் 10.45 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகள் கையொப்பம் செய்தும், எதிரி மற்றும் உதவி ஆய்வாளர் கையொப்பம் செய்தார். அதில் இரண்டு பாட்டில்கள் திறந்த நிலையில் சீல் உடைக்கப்பட்டு இருந்தன.

அதை முகர்ந்து பார்த்தபோது விஷவாடை அடித்தது. பின்பு அந்த பாட்டில்களை ரசாயன பகுப்பாய்வுக்கு சம்பவ இடத்தில் வெள்ளைத் துணியால் நூல் கொண்டு அடைத்து எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் காலை 11.30 மணிக்கு நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண்.267/25, சட்டப்பிரிவு 4(1)(C) r/w, 4(1)(A) TNP Act வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆஜர் எதிரியிடம் இருந்துதான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது. இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் எங்கள் இருவரையும் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்திலிருந்து 9.00 மணிக்கு ரோந்து பணிக்கு கிளம்பி விட்டோம். சம்பவ இடத்திற்கு நாங்கள் சென்றபோது எதிரி தனியாக நின்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்ததாக கூறப்படும்

பகுதி பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தை சுற்றி நிறைய வீடு, கடைகள் உள்ளது என்றால் கடை உள்ளது. வழக்கு சம்பவம் தொடர்பாக பொதுமக்களோ, தனிநபர் யாரும் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பொதுமக்கள் யாரையும் சம்பவ இடத்தில் உதவி ஆய்வாளர் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகளை விசாரித்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு ரோந்து சென்ற போது எதிரி அங்கு நின்று கொண்டிருந்தார். மற்ற இருவர் ஓடி விட்டனர். ஓடிய நபர்களை பிடித்து விசாரித்தோமா என்றால் இல்லை.

இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட மொத்த மதுபானத்தின் அளவு 2.160 லிட்டர் என்றால் சரிதான். ஒரு தனி நபர் தனது சொந்த உபயோகத்திற்காக 4.5 லிட்டர் அளவு மதுபானம் வைத்துக்கொள்ள அனுமதி உள்ளது என்றால் சரிதான். ஆனால் எதிரி விற்பனைக்கு வைத்திருந்ததால் தான் அவரை பிடித்தோம். மகேஸ்வரி பூக்கடை உரிமையாளரையோ, அங்கு இருந்தவர்களையோ சம்பவம் குறித்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சியாக உள்ள குமார் டாஸ்மார்க்கில் பணிபுரியும் நபர் என்பதால் தான் அவரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல.

எனது உயர் அதிகாரி கேட்டுக் கொண்டதின் பேரில் புள்ளிவிவர கணக்கிற்காக எதிரி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை

என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் எதுவும் எதிரியிடமிருந்து கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியது போல் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளை கைது செய்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் உள்ள நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து எந்த மதுபான பாட்டில்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**